70

கடவுள் துணை.

மாமண்டூர்

OFFICE OF ... M...

# சபாபதி முதலியாரவர்கள்

இயற்றிய

# பாரதக்கட்டியம்.

இஃது

சென்னைப் புரசை

இந்துமத பாலிகா தரும பாடசாலைச் சிறுமியர்களுக்காக,

ஷை பாடசாலையின் பரிபாலகர்

ரே. முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

...ீகணேச அச்சியந்திர சாலையிற்

...திப்பிக்கப்பட்டது.

...ழுதற்பதிப்பு.

1913.

O-,1M3B2,13
M13
139943

உ

கடவுள் துணை.

மாமண்டூர்

சபாபதி முதலியாரவர்கள்

இயற்றிய

# பாரதக்கட்டியம்.

இஃது

சென்னைப் புரசை

இந்துமத பாலிகா தரும பாடசாலைச் சிறுமியர்களுக்காக,

ஷை பாடசாலையின் பரிபாலகர்

நே. முனிசாமிமுதலியாரவர்களால்

தமது

ஸ்ரீ கணேச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

1913.

கடவுள் துணை.

# பாரதக் கட்டியம்.

## சேந்தோடை நீலமண்டில வாசிரியப்பா.

சீரணியுமேருகிரி செப்பேடதாகவே
சித்திக்கணேசர்முன்பு
செப்பரியபாரத மெழிதிவைத்தனர்திவ்ய
திருவடிகளைத்துதித்து
வாரணியுமங்கைபங் காளனூர்பொன்னடியை
மறவாமலேமதித்து
வயல்சூழ்பெரும்பேடு வாழ்தியாக ராயவு
பாத்யாயர்கழல்பணிந்து
மதுரமொழிபுலவரடி மறவாமனுடோறும்
வணங்குமொருசிறுபாலகன்
மாமண்டூர்வேங்கடா சலமுதலிமைந்தனென
வருசபாபதியெனக்கே
நிதவரமளித்துகவி பாடநாவிற்குடி
நீங்காதிருப்பவாணி

நின்பாததாமரைக் கன்பனுனுன்னையே
நிதமினைந்தேத்தல்செய்வேன்
வேதமொருநான்கையுஞ் சிக்கறுத்தோனந்த
வியாசமுனியீன்றெடுத்த
வினையனுமந்தகன் பாண்டுமெகாராஜனொடு
விதுரனெனமூவரசராம்
பூதலம்புகழ்பாண்டு புத்திரர்களைவராம்
பொருமையுளகுருடனுக்குப்
பிள்ளையொருநூறுபேர் பொல்லாதகாதகாள்
பூமிமுழுதாசளிக்க
ஆசைகொண்டனுதினஞ் சகுனியோடுறவாடி
யவன்சொல்துர்ப்புத்திகேட்டு
ஐவரையுமூரைவிட் டகலவேசெய்வதற்
காலோசித்தன்றுதானே
தேசதுரைமன்னவர் களிக்கசிப்பியர்களாற்
செய்தனர்சபாமண்டபம்
சிங்காரமாய்வந்து பார்க்கலாமென்றொரு
திருமுகச்செந்திரிக்கை
அந்தகன்சொற்படிக் கருணீகனெழுதினு
னதனைவிதுரன்கொண்டுபோய்

-600 008.

அன்புடன் றமையனருட் பாலர்கைதந்தவ
னெழுதுமுழுகூதிதென்றார்
வந்தவர்கள்சொன்னசொற் கேட்டுவெந்தேறியே
வரச்சொன்னபிதுர்வாக்கியம்
மறுக்கவேயாகாது வாருமென்றவருடன்
வந்தார்முன்னந்தநாட்டில்
மனதுக்குள்கபடமா யுறவாடிபாண்டவரை
மைந்தன்சபைக்கனுப்ப
மனமகிழ்ந்தைவரும் வஞ்சகன்சபைதனில்
வந்துபின் துரியோதனன்
தனதாகத்தருமரைத் தழுவினன்சகுனியும்
தான்மகிழ்ந்தேதுரைப்பான்
தருமபுத்திரரேநின் றம்பிமார் நூற்றுவர்
தாமுமாய்க்கொலுவிருந்து
சபாசிந்தசபைதனில் வீண்பொழுதுபோக்கவுந்
தகுமோவென்றுசைமருகா
சந்தோஷமாகவே சூதாடுவோம்கால
தாமசமிதாகாதென
உபாயமாய்த்தருமருக் கிதமானமொழியுரைத்
தோராட்டமாடுமென்றான்

உத்தமர்கள்சூதாட வொப்பார்களுலகத்தி
லோகோவிதாகாவென
ஒருமைப்படுத்தியே முதலாட்டமாடியவர்
முத்தாரமுங்கெலித்து
ஊர்பதிபண்டிபண் டாரமுதல்யாவையு
முபாயமாய்த்தான்கெலித்து
தருமரொடுதம்பியர்க டமக்கடிமையாகவே
தாஷ்டீகமாய்க்கெலித்து
தார்குழலிதிரௌபதை தன்னைக்கெலித்தந்த
தையலைக்கொடுவாவென
தம்பிதுற்சாதனனை யேவினனவனுமொரு
தாண்டிலேயோடிவந்து
சற்றுமேநெஞ்சிரங் காமல்பாஞ்சாலியை
சபைதனிற்கொண்டுவந்தான்
வம்பனுந்தம்பிமேல் மகிழ்ந்தந்தசபைதனில்
மானமில்லாமலேகி
மாதுதிரௌபதையினது வஸ்திரங்களையவே
வணங்காதமுடிமன்னவன்
வாக்குதந்தானந்த வாக்குதவருமலே
மாபாவிதுற்சாதனன்

மண்ணொன்றும்விண்ணென்றும்பாராமல்திரௌபதியின்
வஸ்திரங்களையலுற்றான்
யோக்கியன்விகர்னனொடு விதுரமகாராஜனு
மொருமையாய்ச்சபையைநோக்கி
உமக்கெலாமனைவியர்க ளில்லையோவாய்பெற்று
மூமைபோலிருப்பதுண்டோ
அந்தணர்கள்மந்திரி பிரதானிசேனாபதி
அகண்டமண்டலமதிபரும்
ஆந்திரர்கர்னாடர் சிங்களர்மாகதர்
அவந்தியர்குருகுநாடர்
சிந்துபதிகொங்கணர் வங்காளர்பப்பரர்
சிறந்ததேசாதிபதிகள்
சீர்பெற்றகூர்ச்சரர் லாடர்மலையாளர்
சிறந்ததேசாதிபதிகள்
மகுடமொடுமகுடமுடி யடிபடத்தளதளென
வணிமணிகள்பளபளெனவே
மனுநீதிதுரோணரொடு கிருபனஸ்வத்தாமன்
மாநூலறிந்தபேர்கள்
புகழுந்துரியோதனன் பொல்லாங்கு செய்வது
பொருந்துமோவுமக்கிதென்பார்

பூமியரசாளுமுடி வேந்தனுர்க்கஞ்சிவாய்
பொத்திகைகட்டிநின்ளும்
பூவைதிரௌபதையாதி மூலமேஅரிஅரி
புவிமுழுதளந்தமாயா
பொங்கரவின்மேற்பள்ளி கொண்டவாபூரண
புருடோத்தமாமாயவா
யாவருமுனதன்பர் யானுமுன்னடிமையென்
னபிமானங்காக்கவேண்டும்
அச்சுதாபச்சைமாலையனே அரிஅரி
ஆழ்கடலில்சயனித்தவா
கோவர்த்தனகிரியைக் குடையென்றெடுத்தவா
கோபாலனேஓமெனக்
கூப்பிட்டகுரலோசை கேள்விகேட்டோடிவரக்
கொண்டாட்டமாய்க்களித்துக்
கோவிந்தனேகொடும் பாவிராவணன்றலையைக்
கொத்தாகப்பத்துங்கொய்தாய்
கொண்டனிறவண்ணனே யிரணியாட்சதனுடைக்
குலமார்கிழித்தவீரா
மச்சாவதாரா வராகவைபோகா
ஸ்ரீவைகுந்தவாசகேசா

வரதாஸ்ரீரங்கம் வாழ்பரந்தாமனே
மார்பில்திருவளர்தேவனே
மெச்சிடும்ராதையதி மோகனேதேவர்க்கு
மெய்யானதெய்வநீயே
வித்துநீமற்றுநீ விண்ணுநீமண்ணுநீ
மேலானஆதிமூலா
என்றபயமென்றகரி முறையிடக்கராவைநீ
வென்றதைக்காத்ததேவா
வீடுவீடாய்நுழைந் துறியடுக்கடுக்கிலே
வீறுநெய்பாலுண்டவா
குன்றுமேலேறியே கோலுடன்குடுவையும்
கொண்டாடுமாடுமேய்த்துக்
கொங்கைகுடம்போலுள்ள நங்கைமார்மனையெலாங்
கூசாமலுறவாடுவாய்
ஆகாதபாவிதுரி யோதனன்கண்ணெதிரி
லாடைதந்தாள்கமென்று
அபயகுரல்கேட்டதே யநேகமாயிரங்கோடி
ஆடைதந்தார்தட்சணம்
ஓகோவிதென்னதுகில் வளருதப்பாவென
ஓடுங்கினன்துற்சாதனன்

ஒருவர்தவருமலே கொலுவீற்றிருந்தவர்க
ளொருகும்பலாயெழுந்து
ஒருமையாலேவரு மனதிலேதியானித்து
ஓதெய்வநீலிசூலி
உத்தமிபஞ்சாட்சரி பத்தினிமயேஸ்வரி
உலகமாதாவென்றுமே
திருமுகம்நோக்கியே தரிசித்துச்செய்குற்றந்
தேவிநீபொறுக்கவென்றூர்
தீமையுளபாவிதிருத ராட்டிரன்மக்களுஞ்
சித்தங்கலங்கினின்றூர்
கொங்குமலேகிடுகிடென கொக்கரித்தேவீமன்
கூறுவான்சபைநடுங்க
கோதையைக்கொண்டுவந் தவனேயிங்கேயந்தக்
கூற்றனூர்க்கேற்றிவிடுவேன்
இலக்கந்தொண்ணூற்ருென்ப தானமாபாதகரை
நானொருவனேகொல்லுவேன்
நச்சுவமர்செய்தவர்கள் பச்சையுதிரந்தாக
பானநான்செய்யாதமுன்
கரத்தாற்சலந்தொட்டுப்புசியனென்றப்பொழுது
கரேமாய்ச்சபதமிட்டான்

காளையாமருச்சுனன் கர்ணனைக்கொல்லவே
களரியிற்சபதமிட்டான்
திறமுடன்நகுலனுஞ் சௌபலன்றன்னைநான்
செகுத்திடுவெனென்றுரைத்தான்
சினமுடன்சகுனியைக் கொல்வனெனவேதேற்றஞ்
செய்தான் சகாதேவனும்
அமர்க்களந்தனில்துரிய னுருளாதமுன்னர்நா
னவிழ்த்தகுழன்முடியேனென
அரிவைதிரௌபதைசொல்ல வருகினிலிருந்தவர்க
ளஞ்சலியுடன்றுதித்தார்
நின்மூடனந்தகன் நீமகாதேவியென
நினையாமற்சிறுபாலகர்
நின்னைஎன்தமயனார் தேவிமச்சினியென்று
நெறியாகவிளையாடினார்
கண்ணிலாதவனிதைக் கண்டனேபயல்களுங்
கபடற்றபாவிமக்கள்
காரியாகாரியந் தெரியாதபேய்ப்பிள்ளை
களை நூறுபெற்றெடுத்தேன்
எண்ணிமுடியாதபிழை யெத்தனைசெய்தாலுநீ
யேபொறுத்தருள்திரௌபதாய்

என்குலத்தெய்வமே ஏழைபிள்ளைகளிவர்க
    ளென்பிள்ளையுன்பிள்ளையென்
றிதவாகசொல்லியே நாடுதந்தேனும
    திருப்பிடம்போமென்றனன்
இந்தமொழிகேட்டந்த சபைதனிற்சகுனியும்
    மெடுத்தெறிந்தேதுசொல்வான்
புதுமையிதுதோற்றபேர் போர்செய்வரென்றுமே
    பிதற்றினுற்பிதப்பையாநாம்
பொருளற்றுபுகழற்று பெட்டிபேழைகளுப்பும்
    சட்டியற்றேதுமற்று
பதியிழந்தோடும்பராரிபாண்டவர்க்கினி
    பாதினுடளிப்பதேனே
பட்டவிடமேபடுங் கெட்டகுடியேகெடுமென்
    பழங்கதைகேட்டதிலையோ
ததிகெட்டுத்தடுமாறு மதிகெட்டபாண்டவரை
    சட்டைசெய்தாவதென்னே
தாரணியைவிட்டவர்களாரணியம்போவதே
    தருமமென்ருன்சகுனியும்
தொண்டுடன்போவதேஞெருகாலடுக்குமோ
    சொல்லுமென்ருள்திரௌபதை

சொன்னபடிசூதாடி தான்கெலித்தார்தருமர்
துரோணர்முதல்பெரியோரெலாம்

இன்றுமுதல்பனிரண்டோ டக்கியாதமோராண்
டிருந்துபின்வாருமென்றார்

இந்தசொற்கடவாம லீராறுவருடங்
திரிந்தார்கள்கானகத்தில்

பார்த்திபனப்போது தவபலத்தால்சுவாமி
பரமசிவனாரிடத்தில்

பாரதம்முடிக்கவே பாசுபதாஸ்திரம்
பாங்குடனளிக்கப்பெற்றான்

கூற்றனைப்போலவே பகையாளியாவரையுங்
கொல்லநாள்பார்த்திருந்தான்

குற்றமில்லாதுபாஞ் சாலியுத்தமியுடன்
கூடியேவனர்திரிந்து

அக்கியாதவாசமவ் விராடபுரத்திலே
ஐவருமறைந்திருந்தார்

ஆண்மையுளவீமனாற் கீசகனிறந்தபின்
அவனியெல்லாம்நடுங்கத்

திக்குவிசயன்மாடுபிடிசண்டைசெய்தபின்
திருமாலைத்தூதனுப்பத்

தேசத்திற்பாதிதரவுஞ்சித்தமின்மையால்
செறியுத்தநாள்வைத்தனர்

பாண்டுமைந்தர்களேழு அக்ரோணிசேனையிற்
பலவந்த அரவானையும்

படைக்குமுன்பலியாக வைத்ததன்பாராசை
பேராசையானதுரியன்

காண்டிபனைவெல்வனென கைதொட்டுக்கர்ணனுங்
கைக்கொத்ததம்பிமாரும்

கணக்காகப்பதினொரு அக்ரோணிசேனையிற்
கனமானபலவான்களும்

அணியணியதாகவே பிரித்துதுரியன்வெள்ளை
யானையைப்பலிகொடுத்தான்

அண்டரண்டங்களோடெண்டிசைகள்செவிடுபட
அடித்தார்கள்ரணபேரிகை

துணையானசுவேதனன் முதனாளையுத்தத்தில்
சுவர்க்கத்துக்கேதுவானான்

துளவமணிமாயனே சாரதியதாகவே
சூராதிசூரவிசயன்

சண்டப்ரசண்டயுத் தண்டனாய்ச்சமர்செய்து
தநுவிஜயன்வெற்றிபெற்றான்

தாரணியில்புகழ்பெற்ற நாரணன்கிருபையால்
சதகோடிமனுமாண்டபின்

மண்டலமும்விண்டலமும் மாறவேபத்தானாள்
மகாவீஷ்மர்தாம்விழுந்தார்